லிருந்து திருமிகு சங்கராச்சாரியார் அவர்கள் மூலமாக அனுப்பப் பட்ட தொகை என்ன ஆயிற்று என்று கேட்டார். இதுபோன்ற விவரங்களை ஒரு நாள் முன்கூட்டிச் சொல்லி, அது குறித்து விவரங்களை நான் சேகரிப்பதற்கு அவர்கள் தவணை தந்து இருப்பார்களேயானால் விவரங்களைச் சொல்ல இயலும். 25 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லப் பட்ட அந்தக் கருத்தையும், போடி கலவரத்திலே உயிர் இழந்தவர் களுக்குத் தரப்பட்டது போல 25 ஆயிரம் ரூபாய் தர வேண்டு மென்று சொல்லப்பட்ட கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும் கூட அவர்கள் அந்தத் தொகையை ஏற்றுக்கொள்வ தாக இருந்தால்—இதுவரையிலே தரப்பட்ட தொகை போக 25 ஆயிரத்தில் மீதித் தொகை அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப் படும், அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் என்பதனையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று அவர்கள் மீது போடப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகள் கடந்த காலத்தில் தொடரப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும். அதை இந்தப் பேரவையிலே நான் முன்னர் அறிவித்து இருப் பதையும் அவர்கள் நினைவுபடுத்தி இருக்கிறார்கள். நான் அறிவித்தது உண்மை கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் குறிப்பிட்ட சில வழக்குகளும், பொது வான பல வழக்குகளும் தொடரப்பட்டு இருக்கிறது. நான் அப்போதே சொன்னேன், குறிப்பிட்ட சில பயங்கரமான வன்முறை வழக்குகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று அன்றைக்கே சொன்னேன். வன்னி யர்கள் மீது மாத்திரமல்ல ஆதிதிராவிட மக்கள் மீதும் தொடரப் பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னேன். அந்த ஆணையில் நேற்றையதினம் நான் உத்திரவு பிறப்பித்து விட்டேன் கையெழுத்திட்டு என்பதை இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

(உ) மழையால் பாதிக்கப்பட்டுள்ள மதுரை நகர் பேருந்து நிலையங்களைச் சீர்படுத்துதல்.

திரு. சோ. பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, மழைக் காலங்களில் மதுரை நகரத்து பொதுமக்கள் மிகவும் அவதிப்படு கிறார்கள். மையப் பேருந்து நிலையத்திலும், அதற்குப்

1989 நவம்பர் 1] [திரு. சோ. பால்ராஜ்]

பக்கத்தில் இருக்கின்ற புகை வண்டி நிலையத்திலும் மற்றும் நகரில் உள்ள தாழ்வான பகுதிகளிலும் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதன் காரணமாக போக்குவரத்து வண்டிகள் உள்ளே செல்ல முடியவில்லை.

(11-55)

போதிய வடிகால் வசதியில்லாத காரணத்தால், சாலைகளெல்லாம் குளங்களாக மாறி வருகின்றன. பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. மத்திய போக்குவரத்து நிலையத்தின் உள்ளே பேருந்துகள் செல்ல முடியாத காரணத்தால் அதற்கு இடம் அளிக்கின்ற வகையில் மாற்று இடம் தற்காலிகமாக வகை செய்யப்பட்டு தரப்பட்டுள்ளது. அதற்காக உத்தரவுகளைப் பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும். அதற்கு உறுதுணை புரிந்த மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகர மக்களை மட்டுமல்லாது வெளியூரிலிருந்து பேருந்துகளில் வருகின்ற மக்களும் இந்தப் பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். அதற்குக் கிருதமால் நதி வழியாக அந்தப் பகுதியில் இருக்கின்ற தண்ணீர் செல்வதற்கு நகரசபை சார்பாக ஐந்தரை கோடி ரூபாய் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதன்மூகத்தான் இதற்கு வழி செய்கின்ற வகையில் முதல் கட்டமாக ஒரு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்தை உடனடியாக வழங்கி கிருதமால் நதியில் தண்ணீர் செல்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். இதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கம் செய்து கிருதமால் நதி சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் பேருந்து நிலையத்தில் தேங்கும் மழை நீரை வெளியில் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.